சார்பு நீதிமன்றம், மேலூர்
OS 457/2019

பெயர் :சுந்தரி
தகப்பனார் பெயர் :
கணவர் பெயர் :மோகன்
வயது :
கிராமம் :கொட்டாம்பட்டி
வட்டம் :மேலூர்
தொழில் :சத்துணவு உதவியாளர்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

23.09.2024

பி.வா.சா.2 முதல் விசாரணை:

நான் இந்த வழக்கில் பிரதிவாதி தரப்பு 2வது சாட்சியாவேன். நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையை பெற்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என் தந்தை பெயர் தர்மலிங்கம். என் தந்தை தர்மலிங்கம் என் பெயரில் ரூபாய் 65,000/-த்துக்கு கிரையம் முடித்து கொடுத்துள்ளார். கொட்டாம்பட்டியில் உள்ள சர்வே எண்.269 உள்ள வீடு ஆகும். எத்தனை செண்டு கிரையம் பெற்றேன் என்று நினைவில்லை. சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பாக கிரையம் பெற்றேன். 1872 சதுரடியை நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் தெரியாது. எனக்கு மறந்துவிட்டது. நான் கிரையம் பெற்று என் அண்ணன் ஆறுமுகத்திடம் சுமார் 4-5 ஆண்டுகள் கழித்து மேற்படி சொத்தை தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துவிட்டேன். நான் கிரையம் பெற்ற சொத்தில் எத்தனை சதுரடியை தான செட்டில்மெண்ட்டாக என் அண்ணன் ஆறுமுகத்திற்கு கொடுத்தேன் என்றால் நினைவில்லை. என் அண்ணனுக்கு 2192 சதுரஅடியை தானமாக கொடுத்துள்ளேன் என்றால் அதுபற்றி தெரியாது. நான் கிரையம் பெற்ற சொத்தை தானமாக கொடுக்க தான் பத்திர ஆபிசில் கொடுத்தேன். ஆனால் பத்திர ஆபிசில் என் அப்பா பெயரில் உள்ள சொத்தையும் சேர்த்து பத்திரம் எழுதிவிட்டார்கள். பிரதிவாதிகளுடைய இடத்தையும் சேர்ந்து நான் தானமாக என் அண்ணன் ஆறுமுகத்திடம் கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி மூவேந்திரன் என் அக்கா ரேணுகாவின் கணவர் ஆவார். அன்புராஜ் என் அக்கா மகன் ஆவார். ரேணுகாதேவி என் அக்கா, செல்லமீனா என் அக்கா மருமகள். எனக்கு கிரையம் கொடுத்த இடத்தையும், மேற்கொண்டு என் அப்பா இடத்தையும் சேர்த்துதானம் கொடுத்ததால் தான் தற்போது வழக்கே ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் அப்பாவிற்கு எனக்கு கிரையம் கொடுத்த சொத்தை தவிர அருகில் வேறு எந்த சொத்து கிடையாது

என்றும் ஆனால் நான் என் அப்பாவுடையசொத்தையும் சேர்த்து கிரையம் கொடுத்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(வாதி தரப்பில் சாட்சி விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

sd./M.Samundeeswari Prabha
Sub Judge,
Melur